TATA MUTUAL FUND



**அனுபவ கல்வி அறிவு பாடங்கள்**

பேராசிரியர் *எளிதிலும்* எளிது™

# இயற்கையும் நிதி அறிவும்

கற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் கைவரப் பெற்றவர்களுக்கு இயற்கை கற்றுக்கொடுக்கும் பாடங்கள் அனேகம். அனுபவ நிதி அறிவுரைகளை விளக்கும் இப் பாடத் தொகுதியில் இயற்கை கற்றுக்கொடுக்கும் பல உதாரணங்களைக் கையாண்டிருக்கிறோம். நிதி நிலை மேலாண்மையில் முக்கிய அங்கம் வகிக்கும் முதலீடுகள் செய்யும் நடவடிக்கைகளில் இப் பாடங்கள் அறிவார்ந்த உறுதுணையாக நின்று உங்கள் ஆர்வத்தை வளர்க்க உதவும் என்று நம்புகிறோம்.



முட்டைப்புழுவிலிருந்து அழகான வண்ணத்துப்பூச்சியாக உருமாறும் வளர்ச்சி அற்புதமானது. ஒரு வித்தாக முதிரா வடிவத்துடன் வெளிப்பட்ட முட்டைப்புழு நீண்டு பயணித்த பிறகே இறுதியில் ஓர் அழகான வண்ணத்துப்பூச்சியாக சந்தோசத்தை அள்ளித் தெளிக்க முடிகிறது.

**படிப்பினை: முதலீடுகளும் வளர்ந்து பெரிதாக கால அவகாசம் தேவை.**

கோடைக்காலத்தில் எறும்புகளின் எண்ணமெல்லாம் குளிர்காலத்தைப் பற்றியதாகவே இருக்கும். குளிர்காலத்திற்குத் தேவையான உணவுகளை சேகரித்து வைக்க அவை கோடைக்காலத்தில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும், ஏனென்றால் கோடைக்காலம் நிரந்தரமற்றது என்று அவை தெரிந்து கொண்டிருக்கின்றன. இது நிரந்தரமில்லாத குளிர்காலம் என்ற சிந்தனையே குளிர்காலத்தில் எறும்புகளின் எண்ணத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும்.

**படிப்பினை: முதலீடு தொகுப்பு ஒன்றை இளமையிலேயே ஆரம்பிக்க வேண்டும், நிச்சயமில்லா வாழ்க்கை நிகழ்வுகளை எதிர்கொள்ள அவை ஆதரவு அளிக்கும்.**



**காணுங்கள், கற்றுக்கொள்ளுங்கள், களிப்படையுங்கள்!**

**பேராசிரியர் *எளிதிலும்* எளிது**



ஆமைகள் உருவடைந்து உயிர்வாழ்ந்திருக்க 200 மில்லியன் வருடங்களுக்கும் அதிக காலம் பிடித்திருக்கிறது. பாதக அபாய சமயங்களில் பாதுகாப்பாக பதுங்கிக்கொள்ள அவைகளிடமிருக்கும் கிட்டத்தட்ட உடைக்கவே முடியாத ஓடுகள் ஆமைகளுக்கு ஒரு வரப்பிரசாதம்.

**படிப்பினை: பலவித சொத்து வகைகளில் பரவலாக முதலீடு செய்து நம் முதலீடுகள் தொகுப்பைப் பாதுகாத்து வைத்துக்கொள்ள வேண்டும்.**

ஒத்துப்போகும் மனப்பாங்குங்குள்ளவர்களுக்கு இயற்கை பாதுகாப்பை மறுப்பதில்லை. மிகக் கடுமையான சூழ்நிலையில் உயிர்வாழும் கள்ளிச்செடி, இலைகளுக்குப் பதிலாக முட்களைப் பெற்று சூழ்நிலையைத் தாக்குப் பிடிக்கிறது.

**படிப்பினை: உங்கள் வாழ்க்கைப் படிநிலையைப் பொறுத்து முதலீடுகளை சீரமைத்துக் கொள்ள வேண்டும்.**





தேனீக்கள் போன்ற பூச்சி இனங்களுக்கு இயற்கை சிறப்பு பொறுப்புகளைக் கொடுத்திருக்கிறது. மலர்களிடம் மகரந்தச் சேர்க்கை, மெழுகு மற்றும் தேன் உற்பத்திகளுக்கு அவை உதவ வேண்டும். இந்த பொறுப்புகளை நிறைவேற்ற கொஞ்சம் கொஞ்சமாக, ஒவ்வொரு கட்டமாக தேனீக்கள் உருவாக்கும் தேன் கூடுகள் கண்கொள்ளாக் காட்சி.

**படிப்பினை: கட்டுப்பாட்டுடன் தொடர்ந்து முதலீடு செய்யுங்கள்**

குறுக்குப் பாதைகளை ஒதுக்கிவிட்டு சுற்று வழிகளிலேயே பிரென்ட் இன காட்டு வாத்துக்கள் பறந்து இடம்பெயர்கின்றன. வடதுருவ கடும் பனி மண்டலத்தைத் தவிர்த்து வழியில் கிடைக்கும் உணவு மற்றும் பாதுகாப்பைக் கருதியே அவ்வாறு செய்கின்றன

**படிப்பினை: முதலீடுகளில் ஈட்டு ஆதாயங்களைப் போலவே அபாயங்களும் முக்கியமானவை.**





கண்களுக்கு விருந்தளிக்கும் இயற்கைக் காட்சிகளில் குட்டிகளிடம் தாய் யானை பரிவுடன் பேசும் காட்சி மிகவும் பிரியமான ஒன்று. வளர்ந்து தனித்தியங்கும் திறன் பெறும் வரை தாய் குட்டிகளை ரட்சித்து வழிநடத்தும்.

**படிப்பினை: நம்பிக்கையான ஆலோசகரின் துணையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.**

எஸ்எம்எஸ் **'TMF'** என்று **57575** எண்ணுக்கு | இணையதளம்: **www.tatamutualfund.com** | எங்களை அழையுங்கள்: **(022) 6282 7777** *(திங்கள் முதல் சனிக்கிழமை வரை காலை 9.00 முதல் மாலை 5.30 மணி வரை)*

**பொறுப்புத் துறப்பு:** டாட்டா மியூச்சுவல் ஃபண்ட் வழங்கும் முதலீட்டாளருக்கான கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கை. • கேஒய்சி ஆவண தேவைகள் மற்றும் முகவரி, தொலைபேசி எண், வங்கி விவரங்கள் மாற்றுதல் நடைமுறை பற்றி அறிந்து கொள்ள தயவு செய்து பாருங்கள்: https://www.tatamutualfund.com/investor-education. • தயவுசெய்து பதிவு செய்யப்பட்டுள்ள மியூச்சுவல் ஃபண்ட்களில் மட்டுமே முதலீடு செய்யுங்கள். இவை பற்றிய விவரங்களை நீங்கள் செபி இணையதளத்தில் ''Intermediaries/market Infrastructure Institutions'' கீழ் சரி பார்க்க முடியும். • டாட்டா மியூச்சுவல் ஃபண்ட் சம்பந்தமான அனைத்து புகார்களையும் service@tataamc.com இமெயிலுக்கு அனுப்புங்கள் மற்றும்/அல்லது பாருங்கள் www.scores.gov.in (செபி ஸ்கோர்ஸ் இணையதளம்). • ஒரு தனி நபரால் துவக்கப்பட்ட, குறிப்பாக சுயமாக நிர்வகிக்கப்படும் அனைத்து ஃபோலியோக்களுக்கும் வாரிசு நியமனம் செய்யும்படி அறிவுறுத்தப்படுகிறது, ஏனெனில் இது ஒரு சுலபமாஜ பரிமாற்ற செயல்முறைக்கு உதவுகிறது. • இந்த தகவல், டாட்டா மியூச்சுவல் ஃபண்டின் முதலீட்டாளருக்கான கல்வி மற்றும் விழிப்புணர்வு நடவடிக்கையின் ஒரு பாகமாகும்.

பரஸ்பர நிதி முதலீடுகள் சந்தை அபாயங்களுக்கு உட்பட்டவை, ஆதலால் திட்ட ஆவணங்களைக் கவனமாகப் படியுங்கள்.